# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 தை02 திங்கட்கிழமை 15.01.2025 கதிர் 97



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel






# தமிழ் அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்யுங்கள்

## அநுர அரசிடம் மனோ எம்.பி. வலியுறுத்து

"அரசியல் கைதிகள் இல்லை" என்ற பழைய பல்லவியைப் பாடாமல் தமிழ் அரசியல் கைதிகளை உடனேயே விடுவியுங்கள் எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி., அரசிடம் வலியுறுத்தியுள்ளார்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் கருத்து தொடர்பில் மனோ எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:-

"சிறையில் அரசியல் கைதிகள் இல்லை" என்ற கருத்தைத்தான் எப்போதும் எல்லா சிங்கள பெரும்பான்மை அரசாங்கங்களிலும், எல்லா அமைச்சர்களும் சொன்னார்கள். அரசாங்கத்தரப்பு அப்படிதான் சொல்வார்கள். அவர்களுக்கு "பயங்கரவாதி". மக்களுக்கு "போராளி". பாலஸ்தீனம் முதல் இலங்கை வரை, உலகம் முழுக்கப் போராட்டங்கள் நிகழ்ந்த நாடுகளில் இப்படித்தான்.

இந்நாட்டில், 1971 இல் தமிழ் இளைஞர் ஆயுதம் தூக்க முன்னமே

7➤

# சீன ஜனாதிபதியை சந்தித்தார் அநுர



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் சீன ஜனாதிபதி சீ ஜின்பிங்குக்கும் இடையிலான உத்தியோகபூர்வ

7➤

# கூட்டுறவுத் தேர்தலில் என்.பி.பி. படுதோல்வி






கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் அமோக வெற்றியீட்டிய தேசிய மக்கள் சக்தி, 2025 ஹோமாகம கூட்டுறவுத் தேர்தலில் படு தோல்வியைச் சந்தித்துள்ளது.

அதன்படி, ஹோமாகமவின் 59 கூட்டுறவு சமாசங்களில் தேசிய மக்கள் சக்தியால் 17 சமாசங்களை மட்டுமே வெல்ல முடிந்தது. தேசிய மக்கள் சக்தி ஆட்சி மீதான மக்கள் அதிருப்தி காரணமாக உள்ளூராட்சி நிர்வாகங்களில் தேசிய மக்கள் சக்திக்கு பின்னடைவு ஏற்பட்டு வருவதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

அதற்கமைய,

7➤

# ஐஸ் போதைப்பொருளுடன் நீதிமன்றப் பணியாளர் கைது



ஐஸ் ரக போதைப்பொருளுடன் நீதிமன்றப் பணியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புதுக்கடையில் உள்ள நீதி மன்றத்தில் கடமையாற்றும் பணியாளரிடமிருந்து 10 கிராம் 800 மில்லிகிராம் ஐஸ் ரக போதைப்பொருள் கைப்பறறப்பட்டுள்ளது.

மேற்படி பணியாளர் இந்த ஐஸ் போதைப்பொருளைக் கஹவத்த பகுதியில் கொள்வனவு செய்தமை தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் வெல்லம பிட்டி பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரைப்பொலிஸார்மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்

## தென்னிலங்கை அரசியலின்

# பிரித்தாளும் தந்திரத்துக்கு நாங்கள் ஆளாக மாட்டோம்!

## ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் சூளுரை



**"சமூக வலைதளங்களிலும் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களிலும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்குத் தலைவரை நியமிப்பது தொடர்பில் திட்டமிட்டிருப்பதாக உறுதி கோராத செய்தி ஒன்று வெளியிடப்பட்டிருந்தது. இந்தச்செய்தியில் உண்மை இல்லை. இது தென்னிலங்கை அரசியல் சக்திகளின் சதியாகும்." - என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

இந்தப் பிரித்தாளும் தந்திரோபாயங்களினால் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஒற்றுமையைச் சிதைக்க முடியாது என்றும் அவர் சூளுரைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையின் முழு விபரம் வருமாறு:-

"இலத்திரனியல் ஊடகங்களிலும் அச்சு ஊடகங்களிலும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவராக செல்வம் அடைக்கலநாதனை நியமிப்பதற்குத் திட்டமிட்டிருப்பதாகக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகள் தெரிவித்ததாக ஓர் அநாமதேய செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இந்த அநாமதேய செய்தி தொடர்பாகக் கட்சியின் பேச்சாளர் என்ற

7➤

# கனேடியத் தூதுவரைச் சந்தித்த சிறீதரன் எம்.பி.



இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஸை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் மற்றும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

அண்மையில் கனடாவுக்குப் பயணமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும்,

7➤

# மாவோ சேதுங் நினைவிடத்தில் ஜனாதிபதி அஞ்சலி







கொழும்பு, ஜன 15

சீன ஜனாதிபதி சீ ஜின்பிங்கின் அழைப்பின் பேரில் சீனாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, புதன்கிழமை காலை சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறு அடங்கலான கண்காட்சியைப் பார்வையிட்டார்.

பின்னர், சீன வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமான குங் அரண்மனை அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து சீன மக்கள் குடியரசின் ஸ்தாபகர் தலைவர் மாவோ சேதுங் நினைவிடத்திற்குச் சென்று மலர் அஞ்சலி செலுத்தினார்.

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத் நாயக்க ஆகியோரும் இந்த சந்தர்ப்பத்தில் இணைந்து கொண்டனர். (ஐ)

## வலதுசாரிக் கட்சிகளை இணைக்க பேச்சுவார்த்தை

கொழும்பு, ஜன 15

அனைத்து வலதுசாரிக் கட்சிகளையும் ஒன்றிணைத்து கூட்டணி அமைப்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக ஐக்கிய மக்கள் சக்தி பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம். மரிக்கார் இன்று ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

“தலைவர் யார் என்பது முக்கியமில்லை, ஆனால் ஞுதுஉ மிகப்பெரிய எதிர்க்கட்சியாக இருப்பதால், அதில் பெருமட இடம் இருக்கும். ஞுதுஉ தற்போது 40 இடங்களை பாராளுமன்றத்தில் வைத்திருக்கிறது, இதன் அடிப்ப டையிலேயே அனைத்து விஷயங்களும் நடக்கும்,” என்று அவர் கூறினார். (ஐ)

## சீகிரியாவை இரவில் பார்வையிட முடியாது

சீகிரியா கோட்டை இரவு நேர பயணத்திற்காக திறக்கப்படும் என சமூக ஊடகங்களில் பரவி வரும் செய்திகளை புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு இன்று மறுத்துள்ளது. இரவு நேர சுற்றுலாவுக்காக கோட்டை விளக்குகளால் ஒளிரச் செய்யப்பட்டுள்ளதாக சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் கூற்றுகளுக்கு பதிலளிக்கும் வகையில், அத்தகைய முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்று அமைச்சகம் தெளிவுபடுத்தியது. எனவே சீகிரியா இரவு நேரத்தில் பார்வையிட திறக்கப்படாது என்று அவர்கள் தெளிவுபடுத்தினர். (ஐ)

## கோலாகலமாக இடம்பெற்ற பட்டத் திருவிழா










கொழும்பு, ஜன 15

வல்வை சர்வதேச விநோத பட்டத் திரு விழா, தைப்பொங்கல் தினமான நேற்று மிகவும் கோலாகலமாக வல்வை உதயசூரியன் உல்லாசக் கடற்கரையில் நடைபெற்றது.

வல்வை விக்னேஸ்வரா சனசமூக நிலையம் மற்றும் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது விநோதமான பட்டங்கள் பறக்கவிடப் பட்டன. (ஐ)

## 10க்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்கள் ஆர்வம்



கொழும்பு, ஜன 15

சுற்றுலா தொடர்பான திட்டங்களுக்காக முன்னர் அமைச்சர்கள் பயன்படுத்திய அரச பங்களாக்களை மேம்படுத்த விலைமனுக் கோருவதற்கான அரசாங்கத்தின் முடிவைத் தொடர்ந்து, பத்துக்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்கள் இந்த சொத்துக்களை வாடகைக்கு எடுக்க ஆர்வம் காட்டியுள்ளன என்று அதிகாரப்பூர்வ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் பல அரசு அமைப்புகள் இந்த குடியிருப்புகளுக்கு முன்பு கோரிக்கைகளை சமர்ப்பித்தனர்.

பொதுநிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்னவிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, அமைச்சர் மற்றும் ஜனாதிபதி பங்களாக்கள் தொடர்பில் ஆராய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும், தற்போது அவற்றின் பெறுமதிகளை மதிப்பீடு செய்து வருவதாகவும் தெரிவித்தார். இந்த மதிப்பீட்டிற்குப் பிறகு பங்களாக்கள் தொடர்பான முடிவுகள் எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

குறித்த பங்களாக்களுக்கான வாடகைக் கோரிக்கைகளை பல்வேறு தரப்பினர் சமர்ப்பித்துள்ள நிலையில், இதுவரையில் எதுவுமே நடைமுறைப்படுத்தப்படவில்லை என அமைச்சர் குறிப்பிட்டார்.

கொழும்பு, கண்டி, நுவரெலியா, அனுராதபுரம், கதிர்காமம், யாழ்ப்பாணம், எம்பிலிபிட்டிய, பெந்தோட்டை மற்றும் மஹியங்கனை ஆகிய இடங்களில் ஜனாதிபதிக்காக நியமிக்கப்பட்ட ஒன்பது பங்களாக்கள் உள்ளன.

கூடுதலாக, அமைச்சர்களுக்கான சில பங்களாக்கள் பழுதடைந்துவிட்டன மற்றும் பயன்படுத்த முடியாதவை எனவும், தேவையான பழுதுபார்ப்புகளுக்கு நிதியளிப்பதில் நிதி நெருக்கடிகள் சவாலாக உள்ளதாகவும் அமைச்சகம் தெரிவித்தது. (ஐ)

## 9 வயது சிறுமி மீது பாலியல் சேஷ்டை: 69 வயதானவர் கைது

கொழும்பு, ஜன 15

*சிறுமியை பாலியல் சேஷ்டை செய்தமை தொடர்பில் சந்தேகத்தின்பேரில் அதிர்ஷ்ட இலாப சீட்டு விற்பனை செய்யும் நபரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.*

*அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வீரமுனை பகுதியில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன் கடந்த திங்கட்கிழமை (13) இவ்விடயம் குறித்து சிறுமியின் தாயார் முறைப்பாடு ஒன்றை சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்டிருந்தார்.*

*குறித்த முறைப்பாட்டிற்கு அதிர்ஷ்ட இலாப சீட்டு விற்பனை செய்யும் நபரை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

*இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வீரமுனை பகுதியில் வாடகை வீட்டில் தங்கி அதிர்ஷ்ட இலாப சீட்டு (லொத்தர் டிக்கெட்) விற்பனை செய்பவர் எனவும் அம்பாறை பகுதியை சேர்ந்தவர் என்பதும் முதற்கட்ட விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.*

*மேலும் பாதிக்கப்பட்ட 9 வயது சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ஐ)*

# நாகர்கோவில் பகுதியில் கரை ஒதுங்கிய மர்ம வீடு





கொழும்பு, ஜன 15

யாழ் வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியில், புதன்கிழமை அதிகாலை 3 மணியளவில் மர்ம வீடு ஒன்று கரை ஒதுங்கி உள்ளது.

கடலில் அண்மைக்காலமாக ஏற்பட்ட மாற்றங்களினால் கடல் சீற்றம், சூறா வளி புயல், நிலநடுக்கம் போன்றவை பல தென் கிழக்கு ஆசியா நாடுகளில் ஏற்பட்டது .

அதன் போது மியன்மார்.தாய்வான். தாய்லாந்து. மலேசியா இந்தியா.போன்ற நாடுகளில் இருந்து வந்து இருக்கலாம் என நம்ப படுகிறது. குறித்த வீட்டில் பௌத்த சமயத்தை தாங்கிய பல மரபு அம்சங்கள் இருப்பதாகவும் தெரியவருகிறது. குறித்த வீட்டை பார்வையிடுவதற்கு பல மக்கள் குவிந்துள்ளனர்.(ஐ)

# வெலே சுதாவுக்கும் மனைவிக்கும் 8 ஆண்டுகள் சிறை



கொழும்பு, ஜன 15

போதைப்பொருள் வியாபாரியான வெலே சுதா என்றழைக்கப்படும் கம்பளை விதானகே சமந்த குமார, அவரது மனைவி உட்பட மூன்று குற்றவாளிகளுக்கு, பணமோசடி வழக்கு தொடர்பாக கொழும்பு மேல் நீதிமன்றம் எட்டு ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்தது புதன்கிழமை (15) தீர்ப்பளித்தது.

நீண்ட விசாரணைக்குப் பிறகு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட பெந்திகே தீர்ப்பை வழங்கினார். (ஐ)

# வீடொன்றில் அதிகாலையில் துப்பாக்கிச் சூடு

கொழும்பு, ஜன 15

தொடங்கொட, வில்பத்த பகுதியில் உள்ள வீடொன்றின் மீது இன்று (15) அதிகாலை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக தொடங்கொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டின் பல ஜன்னல்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாகவும், அதேவேளையில் இந்தச் சம்பவத்தில் உயிரிழப்பு அல்லது காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பில் களுத்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஓய்வு-பெற்ற பொலிஸ் அதிகாரி ஒருவரின் வீட்டை குறி வைத்து துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாக முதற்கட்ட விசார-ணையில் தெரியவந்துள்ளது.

பொலிஸ் விசாரணைகளில், ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரியின் இளைய மகனின் பெயரைக் கூறி, இனந்தெரியாத ஆயுததாரிகள் வீட்டின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

எனினும் இளைய மகன் தற்போது வெளிநாட்டில் இருப்பதாக பொலிஸ் அறிக்கை கூறுகிறது. (ஐ)



# மிதி வெடி

எல்லாரும் பொங்கிப் பூரிச்சுப் போய் இருக்கிறியள் போல...?

ஒவ்வொரு வருசமும் இப்பிடித்தான் பாருங்கோ... கடந்து போன வரியத் தோட துன்பமெல்லாம் விலகி விட, வரப்போற வருசம் வரப்பிரசாதமா ஒளிமயமா அமையும் எண்டு நம்பிக்கொண்டு தான் எல்லாருக்கும் விடியுறது..

ஆனா... முடியேக்க தான் தெரியும் பெரிசா ஒண்டும் வெட்டிக் கிழிக்கேல்ல எண்டு....

"ஒளிமயமான" எண்டு சொல்லேக்க தான் ஒண்டு ஞாபகம் வருகுது.... இருக்கிறதையும் பிடுங்கினால் எப்பிடி ஒளி மயமா இருக்கிறது?

சப்பாத்து காலுக்குப் பொருத்தமில்லாட்டில், சப்பாத்தை மாத்திப் போட்டு, பயணத்தைத் தொடருவியளோ... இல்லாட்டி சப்பாத்து இல்லை அப்பிடியே அதிலயே நில்லுங்கோ எண்டு போற பயணத்தை மறிச்சு வைப்பியளோ?

அது கூடப் பரவாயில்லை... இது சப்பாத்து காலுக்கு இடைஞ்சலா இருக்குது எண்டதுக்காகக் காலையே வெட்டுற விளையாட்டாயெல்லே கிடக்கு.....

போன மாசம் 17 ஆந் திகதி எண்டு நினைக்கிறன்.. தட்டாதெருச் சந்தியில - மழை நேரம் ஏற்பட்ட மின் ஒழுக்கால மாடொண்டு துடி, துடிச்சுச் செத்ததெல்லே.. அந்தக் கதை எல்லாருக்கும் தெரியும் தானே...?

அதுக்குப் பிறகு நடந்தது ஆருக்கும் தெரியுமே?

"கேக்கிறதுக்கு ஆள் இல்லாட்டில் தம்பி சண்டப் பிரசண்டன்" தான் பாருங்கோ...

"கரண்ட் லீக்" பண்ணித்தான் மாடு செத்தது எண்டது அப்பட்டமான உண்மை. மழை நேரம் உப்பிடியான பிரச்சினையள் வாறது தவிர்க்க முடியாதது தான்.. ஆனா அதுக்காக....?

சம்வத்துக்குப் பிறகு, சம்பவம் பற்றி மின்சார சபை அசண்டையீனமா இருந்தது பற்றி ஆளாளுக்கு வாய்க்கு வந்தபடி கதைச்சவை தான்..

ஒவ்வொருத்தரும் தன்னட்ட வாரமா தங்கட :பேஃஸ்புக்" ல வேற எழுதினவை தான்... அதுக்காக ஒரு மாநகரத்தையே மாசக் கணக்கா இருட்டில வைச்சிருக்கிறதை ஏற்றுக் கொள்ளேலுமே?

மாசம் என்ன, வருசக் கணக்கா வேணுமெண்டாலும் வைச்சிருப்பம்.. ஏனெண்டா... "நாங்கள் உங்கட அரசாங்கத்துக்குள்ள எல்லாம் வரமாட்டம். உங்கட "கிளீன் ஸ்ரீலங்கா" எல்லாம் எங்களுக்கு இல்லை.. எண்டது தான் உவையின்ர கணக்கு...

வீதி ஓர மின்விளக்குக் கம்பம் ஆருக்குச் சொந்தம் - ஆர் உதைப் பாத்திருக்க வேணும் எண்டெல்லாம் பட்டிமன்றம் வேற வைச்சவை. மாநகர சபை "ஏரியா" - மாநகர சபை பாத்திருக்க வேணும் எண்டு ஒரு சாராரும், இல்லை அது வீதி அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான வீதி அவை தான் பாத்திருக்க வேணும் எண்டு இன்னொரு சாராருமா வழக்காடு மன்றமே நடத்தி "பேஃஸ்புக்"ல தீர்ப்பும் குடுத்திட்டினமாம்.

வீதி அபிவிருத்தித் திணைக்கள வீதியில இருக்கிற வீதி விளக்குக் கம்பங்களுக்கும் மாநகர சபைக்கும் தொடப்பே இல்லையாம்... அந்த மின் கம்பங்களுககான இணைப்பு எல்லாம் நேரடியா மின்சார சபை தானாம் பாக்கிறவையாம்....

சரி அதை விடுங்கோ... எல்லாருமா வழக்காடு மன்றம் நடத்தி, குற்றவாளிக் கூட்டில தங்கள நிறுத்திப் போட்டினம் எண்டு கடுப்பாகின மின்சார சபை அண்டைக்கு "கரண்ட்"ஐ நிப்பாட்டினவை.... இண்டைக்கு வரையும் திரும்பப் போடவே இல்லயாம் பாருங்கோ....

அதிலயும் வேடிக்கை என்னெண்டா.... சம்பவம் நடந்த இடத்து "போஸ்ட்"க்கான "கனெக்சன்" மட்டும் நிப்பாட்டுப் படேல்ல ஒட்டுமொத்த யாழ். மாநகரத்துக்குள்ளேயும் வெள்ளைத் தூணுகள் எல்லாத்தையும் நிப்பாட்டி வைச்சிருக்கினம். நாளையோட கிட்டத்தட்ட ஒரு மாசமாகப் போகுது.

ஏற்கனவே, சிவப்புத் துண்டுக்காரன் அதிகாரத்தில இருக்கேக்க உந்த வெள்ளைக் கம்ப "மேக்கூரி லைற்" போடுபட்ட கதை வேற கிடக்குது. அதைப்பற்றி இப்ப அதைப் கதைக்கேல்ல.. இன்னொரு முறை பாப்பம்... எந்தெந்த "என்ஜினியர்" எவ்வளவு அடிச்சவர்...? ஆராருக்கு எவ்வளவு குடுத்தவர்? "கொன்ராக்ட்" எப்பிடிக் குடுபட்டது? "மிஸ்டர் 10 "பேர்சன்ற்"க்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்? எண்டதையெல்லாம் இன்னொரு நாள் பாப்பம்.....

இண்டைக்குச் சொல்ல வந்த விசியத்தோட இப்ப நிப்பம்...

தட்டாதெரு சம்பவத்துக்குப் பிறகு வீதி விளக்குகளை ஆர் நிப்பாட்டினவை, ஆர் "ஓடர்" போட்டவை எண்டதெல்லாம் எனக்குத் தெரியாது. ஆனாப் பாருங்கோ... தென்னை மரத்தில் தேள் கொட்டினால் பனை மரத்தில் நெறி கட்டின கணக்கா.. தட்டதொருவில "லீக்" எண்டால், நல்லூரடியில ஏன் இ டாக இருக்க வேணும்?

அது வேற ஒண்டுமில்லப் பாருஙங்கோ... அந்தளவுக்கு எங்கட அதிகாரிமாரிண்ட அதிகாரம் இருக்குது... "நாங்கள் என்னவும் செய்வம் எங்களக் கேப்பாரில்லை" எண்டது தானே?

இதுவே காசு வாங்கிக் கொண்டு செய்யுறதெண்ட, இத்தனைக்கும் அந்த "அம்மணி" வீட்டுக்கு வெளியால உள்ள சந்தியில வந்து நிண்டு "கோல்" அடிச்சிருப்பா....

வீட்டுக்க வந்து காசு வாங்கினால் அங்கினேக்க "கமரா"வில மாட்டுப்பட்டுவம் எண்டதால கடும் கவனமாம் பாருங்கோ... சந்தியில வந்து நிண்டு சத்தமில்லாமல் காரியத்தை முடிச்சிருவாவாம்.

ஆருக்கும் "அப்ரூவல்" வேணுமெண்டா அம்மணியிட்ட "செற்றில்" பண்ணினால் அலுவல் நடக்குமாம்....

அப்பத் தானே அம்மணியின்ர பேரில வல்லை - மண்டான் சந்தியில கோடிக் கணக்கான "ப்ரொஜெக்ற்" ல "இன்வெஸ்ற்" பண்ணலாம்....

"ஊரை அடிச்சு உலையில போடுற" தெண்டது இதைத் தானோ தெரியேல்ல... " ஊரான் வீட்டு நெய்யே ! என் பொண்டாட்டி கையே !"

–நரமுனி–

# பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ்.க்கு எதிராக போராடுகிறோம்- ராகுல் காந்தி!

பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ்.க்கு எதிராக போராடுகிறோம் என காங்கிரஸ் புதிய தலைமை அலுவலக திறப்பு விழாவில் இன்று ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் பாராளுமன்ற மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி கூறுகையில் மிகவும் முக்கியமான தருணத்தில் புதிய தலைமை அலுவலகத்தைத் திறந்து வைத்துள்ளோம். ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பகவத் நேற்று பேசும்போது, 1947-ல் இந்தியா உண்மையான சுதந்திரத்தை அடையவில்லை, அயோத்தியில் ராமர் கோவில் கட்டப்பட்டபோதுதான் நாடு உண்மையான சுதந்திரத்தை அடைந்தது என்று கூறி இருந்தார்.

இந்தக் கட்டிடம் சாதாரணமானது அல்ல. இது இலட்சக்கணக்கான மக்களின் கடின உழைப்பு மற்றும் தியாகத்தின் விளைவு.

சுதந்திரப் போராட்டத்தின் மிகப் பெரிய பலன் நமது அரசியலமைப்பு ஆகும்.

மோகன் பகவத் பேசும்போது, அரசியலமைப்பு நமது சுதந்திரத்தின் சின்னம் அல்ல என்று மறைமுகமாக விமர்சித்தார். காங்கிரஸ் கட்சி எப்போதும் உயர் மதிப்பீடுகளைக் காக்க பாடுபட்டு வருகிறது. அத்தகைய மதிப்பீடுகள், இந்தக் கட்டிடத்தில் பிரதிபலிக்கப்படுகிறது.

பா.ஜ.க, ஆர்.எஸ்.எஸ் என்ற அரசியல் அமைப்புக்கு எதிராக நாங்கள் போராடுகிறோம். அவர்கள் நாட்டில் உள்ள கிட்டத்தட்ட ஒவ்வொரு நிறுவனத்தையும் கைப்பற்றி உள்ளனர். பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ்.சுக்கு எதிராக மட்டுமல்ல இந்திய அரசையே எதிர்த்துப் போராடுகிறோம் என ராகுல்காந்தி பேசினார்.



## ஐ.ஐ.டி. மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த வாலிபர் அதிரடி கைது!




ஐ.ஐ.டி. மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த வழக்கில் வாலிபர் இன்று அதிரடியாக கைது செய்யப்பட்டுள்ளார்.

சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளான சம்பவம் அதிர்வலைகளை ஏற்படுத்திய நிலையில் தற்போது இந்த சம்பவம் நடந்துள்ளது.

சென்னை ஐ.ஐ.டி.யில் படித்து வரும்மாணவிஒருவர்அங்குள்ள விடுதியில் தங்கியுள்ளார். நேற்று பொங்கல் பண்டிகையையொட்டி அவர் கோட்டூர்புரத்தில் உள்ள பேக்கரியுடன் இணைந்த டீ கடைக்கு சென்றுள்ளார்.

அப்போது அங்கு பணிபுரியும் வாலிபர் ஒருவர் மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். அவர் எல்லை மீறிய நிலையில் அந்த மாணவி கோட்டூர்புரம் பொலிஸாரிடம் புகார் கொடுத்தார்.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் பேக்கரி கடைக்கு விரைந்து வந்து மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த வாலிபரை கைது செய்து விசாரித்த போது அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். அவரது பெயர் ஸ்ரீராம் (29). உத்தரபிரதேச மாநிலத்தை சேர்ந்தவர். மாணவியின் புகாரின் அடிப்படையில் அவரை கைது செய்து விளக்கமறியலில் வைத்துள்ளனர்.

## மதுபான கொள்கை முறைகேடு- கெஜ்ரிவால் மீது வழக்கு தொடர அமலாக்கத்துறைக்கு மத்திய அரசு அனுமதி!

டெல்லி அரசின் மதுபான கொள்கை முறைகேட்டில் ரூ.2800 கோடி ஊழல் நடந்ததாக குற்றம் சாட்டப்பட்டது. இந்த வழக்கில் அரவிந்த் கெஜ்ரிவால், மணீஷ் சிசோடியா கைது செய்யப்பட்டனர். பின்னர் இருவரும் ஜாமினில் விடுவிக்கப்பட்டனர். சி.பி.ஐ., அமலாக்கத்துறை இந்த வழக்கை விசாரித்து வருகிறது.

கடந்த நவம்பர் 6-ஆம் திகதி மேல் நீதிமன றத்தில் அளித்த தீர்ப்பில், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி அரசின் முன் அனுமதி பெறாமல் அரசு ஊழியர் ஒருவரை பணமோசடி வழக்கின் கீழ் கைது செய்ய முடியாது என்று தெரிவித்து இருந்தது. இந்த தீர்ப்பின்படி கெஜ்ரிவால், மீது வழக்கு தொடர அனுமதி கோரி, துணைநிலை ஆளுநர் வி.கே.சக்சேனாவுக்கு அமலாக்கத்துறை கடிதம் எழுதியிருந்தது. அவரும் அதற்கு ஒப்புதல் அளித்து இருந்தார்.

இந்த நிலையில் மதுபான கொள்கை ஊழல் தொடர்பாக ஆம் ஆத்மி கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் கெஜ்ரிவால் மீது பணமோசடி வழக்கு தொடர அமலாக்கத்துறைக்கு மத்திய உள்துறை அமைச்சகம் அனுமதி வழங் கியுள்ளது. சட்டசபை தேர்தல் நடைபெற உள்ள நிலையில் இது டெல்லி அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



## பொங்கல் அன்று நடக்க இருந்த யுஜிசி நெட் பரீட்சைகள் ஒத்திவைப்பு – தேசிய பரீட்சைகள் முகமை!

பொங்கல் தினத்தன்று நடைபெற இருந்த யு.ஜி.சி. நெட் பரீட்சைகள் ஒத்தி வைக்கப்படுவதாக தேசிய பரீட்சை முகமை அறிவித்து இருக்கிறது.

ஜனவரி 15 ஆம் திகதி பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுவதை அடுத்து அன்றைய தினம் நடைபெறவிருந்த பரீட்சை ஒத்திவைக்கப்பட்டு இருப்பதாக தவளைகள் வெளியான நிலையில் இந்த திகதியில் நடைபெற இருந்த பரீட்சை மீண்டும் எப்போது நடத்தப்படும் என்பது பின்னர் அறிவிக்கப்படும்.

இதேவேளை ஜனவரி 16 ஆம் திகதி நடைபெற இருக்கும் பரீட்சை அதே திகதியில் மாற்றமின்றி நடைபெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மத்திய அமைச்சர் இல்லத்தில் பொங்கல் பண்டிகையை கொண்டாடிய பிரதமர் மோடி!



மத்திய அமைச்சரும், தெலுங்கானா மாநில பா.ஜ.க. தலைவருமான ஜி. கிஷன் ரெட்டியின் இல்லத்தில் இன்று நடைபெற்ற பொங்கல் மற்றும் சங்கராந்தி கொண்டாட்டங்களில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொண்டார்.

இக்கொண்டாட்டத்தின் போது தெலுங்கு திரையுலகின் முன்னணி நடிகர் சிரஞ்சீவி, பிரபல பேட்மிண்டன் வீராங்கனை பி.வி. சிந்து மற்றும் பல மத்திய அமைச்சர்கள், மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவும் போன்றோர் கலந்து கொண்டனர்.

இதில் பல்வேறு பகுதிகளில் பல்வேறு பெயர்களில் கொண்டாடப்பட்டு வரும் அறுவடை தொடர்பான திருவிழா கொண்டாட்டங்களில் பிரதமர் மோடி இன்று கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## ஆந்திராவில் மீனவர் வலையில் சிக்கிய இரண்டு தங்க மீன்கள்– ரூ.1.40 இலட்சத்திற்கு விற்பனை!

ஆந்திர மாநிலம், அனகாபள்ளி மாவட்டம், புடி மடக மீனவர்கள் கடலில் மீன் பிடிக்க சென்ற போது வலையில் 2 தங்க நிறத்திலான மீன்கள் வலையில் சிக்கியுள்ளது.

வலைக்குள் சிக்கிய இரண்டு மீன்களையும் மீனவர்கள் கரைக்கு கொண்டு வந்தனர். ஆண் கச்சடி எனும் வகையை சேர்ந்த இந்த மீன்கள் தங்க நிறத்தில் இருப்பதால் இதை தங்க மீன்கள் என மீனவர்கள் அழைக்கின்றனர்.

மிகவும் சுவை மிகுந்த, மருத்துவ குணம் கொண்ட இந்த மீன்களை வாங்க வியாபாரிகள் போட்டி போட்டனர்.

புடி மடகாவை சேர்ந்த வியாபாரி ஒருவர் 2 மீன்களையும் ரூ.1.40 லட்சத்திற்கு ஏலத்தில் எடுத்தார். ஏலத்தில் எடுத்த மீன்களை கல்கத்தாவுக்கு ஏற்றுமதி செய்ய வியாபாரி ஏற்பாடு செய்தார்.

சங்கராந்தி பண்டிகையையொட்டி மீனவர் வலையில் தங்க மீன் சிக்கி ரூ.1.40 லட்சத்திற்கு ஏலம் போனதால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.



# ஃபேஷன்

## உங்கள் சுயத்தின் பிரதிபலிப்பு!

நாகரீகம் என்பது வெறும் ஆடை சார்ந்தது அல்ல இது சுய வெளிப்பாட்டிற்கான ஒரு சக்திவாய்ந்த கருவியாகும், மேலும் இது நமது நம்பிக்கையையும் அதிகாரமளிக்கும் உணர்வையும் கணிசமாகப் பாதிக்கும். நாம் எப்படி ஆடை அணிந்துகொண்டு, உலகிற்கு முன்வைக்கிறோம் என்பது, நாம் எப்படி உணர்கிறோம், மற்றவர்கள் நம்மை எப்படி உணர்கிறார்கள் என்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

ஃபேஷன் மற்றும் நம்பிக்கைக்கு(Fashion and Confidence) இடையிலான உறவு சுய வெளிப்பாடு மற்றும் அதிகாரமளிக்கும் ஒரு வடிவமாக தனிப்பட்ட பாணி தேர்வுகளைத் தழுவுவதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.



### சுய வெளிப்பாடாக ஃபேஷன்

உங்கள் ஆளுமை, மதிப்புகள் மற்றும் தனித்துவத்தை வெளிப்படுத்துகிறது. மேலும் ஃபேஷன் அழகியல்களை ஆராய்வது மற்றும் தனித்துவமான ஃபேஷன் அடையாளத்தை உருவாக்க உத்வேகம் கண்டறிதல்.

உணர்ச்சிகள், படைப்பாற்றல் மற்றும் தனிப்பட்ட வளர்ச்சியை வெளிப்படுத்துவது போன்றவற்றில் முக்கிய பங்கு வகிக்கிறது.

நமது வெளித்தோற்றத்திற்கும் உள் சுய உணர்விற்கும் உள்ள தொடர்பானது, நமது உண்மையான சுயத்துடன் ஒத்துப்போகும் விதத்தில் ஆடை அணிவதாகும். இது நமது நம்பிக்கையையும் சுயமரியாதையையும் அதிகரிக்கிறது. தேர்வுகளில் வசதியான மற்றும் அதிகாரம் பெற்ற உணர்வின் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

சமூக எதிர்பார்ப்புகளுக்கு இணங்குவதை விட தனிப்பட்ட பாணியைத் தழுவுவது சிறந்ததாகும். ஃபேஷன் விதிகள் இல்லை என்பதையும், சுய வெளிப்பாடு கொண்டாடப்பட வேண்டும் என்பதையும் புரிந்துகொள்வது அவசியமாகும் . இது பெண்களின் தனித்துவமான குணங்களைத் தழுவி, அவர்களின் ஃபேஷன்(Fashion and Confidence) தேர்வுகள் மூலம் தங்களை நம்பகத்தன்மையுடன் வெளிப்படுத்த ஊக்குவிக்கிறது.

பேஷன் சுய-அதிகாரம் பெறுவதற்கான ஒரு கருவியாக செயற்படுகிறது.

தைரியமான மற்றும் வழக்கத்திற்கு மாறான பாணி தேர்வுகள் மூலம் ஒரே மாதிரிகள் மற்றும் சமூக விதிமுறைகளிலிருந்து விடுபடும் திறன் இதற்கு உண்டு.

அழகு தரநிலைகளை சவால் செய்வதற்கும் மறுவரையறை செய்வதற்கும், உள்ளடக்கம் மற்றும் பன்முகத்தன்மையை மேம்படுத்துவதற்கும் ஃபேஷனைப் பயன்படுத்த முடியும்.

உங்கள் தனிப்பட்ட பாணியை பிரதிபலிக்கும் மற்றும் உங்கள் நம்பிக்கையை அதிகரிக்கும் நன்கு வடிவமைக்கப்பட்ட உடைகளை அணிவது முக்கியம்.

வேலை, சிறப்பு சந்தர்ப்பங்கள் மற்றும் அன்றாட வாழ்க்கை போன்ற வாழ்க்கையின் வெவ்வேறு பகுதிகளில் வெற்றிக்கான ஆடைகளை அணிவதற்கான உதவிக்குறிப்புகள் இப்போது இணையம் எங்கும் கொட்டிக் கிடக்கிறது.

ஆடைகளை அணிவதால் ஏற்படும் தாக்கம், உங்களை வசதியாகவும், அதிகாரம் பெற்றதாகவும், உலகை எதிர்கொள்ளத் தயாராகவும் வைக்கும்.

பொதுவான ஃபேஷன் பாதுகாப்பின்மைகளை நிவர்த்தி செய்தல் மற்றும் அவற்றைக் கடப்பதற்கான உத்திகளை வழங்குதல் அவசியம். சுய-ஏற்றுக்கொள்ளுதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துதல் மற்றும் நமது உடல்கள் மற்றும் தனிப்பட்ட பாணி தேர்வுகளைத் தழுவுதல்.

பெண்கள் தங்கள் ஆறுதல் மண்டலங்களை விட்டு வெளியேறி, புதிய பாணிகள் மற்றும் போக்குகளைப் பரிசோதிக்க ஊக்குவிக்கிறது.

ஃபேஷன் என்பது சுய கண்டுபிடிப்பு மற்றும் பரிணாம வளர்ச்சியின் தொடர்ச்சியான பயணம் என்பதை அங்கீகரிப்பது. உங்கள் பாணியை புதுப்பித்து, வித்தியாசமான தோற்றத்துடன் பரிசோதனை செய்வதற்கான சுதந்திரத்தைத் தழுவ வேண்டும். அழுத்தம் அல்லது ஒப்பீட்டின் ஆதாரமாக இல்லாமல், ஃபேஷனை மகிழ்ச்சியான மற்றும் அதிகாரமளிக்கும் அனுபவமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஃபேஷன் என்பது போக்குகள் மற்றும் அழகியல்களுக்கு அப்பாற்பட்ட சுய வெளிப்பாட்டின் ஒரு சக்திவாய்ந்த வடிவமாகும். தனிப்பட்ட பாணித் தேர்வுகளைத் தழுவுவது, நமது உண்மையான சுயத்தை வெளிப்படுத்தவும், நமது நம்பிக்கையை அதிகரிக்கவும், அதிகாரமளிக்கும் உணர்வை வளர்க்கவும் அனுமதிக்கிறது. நமது தனித்துவத்தைத் தழுவி, ஒரே மாதிரியான பழக்கவழக்கங்களிலிருந்து விடுபட்டு, நமது தனித்துவமான பேஷன் பயணங்களைக் கொண்டாடுவதன் மூலம், ஃபேஷனின் மாற்றும் சக்தியைப் பயன்படுத்தி, சுய வெளிப்பாடு மற்றும் நம்பிக்கையின் உலகத்தைத் திறக்கலாம். ஃபேஷன் உங்கள் உள் சுயத்தின் பிரதிபலிப்பாகும். இதை எபோதும் நினைவில் கொள்ளுங்கள், எனவே உங்களுக்காக ஆடை அணியுங்கள், உங்கள் பாணியைத் தழுவுங்கள், உங்கள் நம்பிக்கை பிரகாசிக்கட்டும்.

பேஷன் சுய-அதிகாரம் பெறுவதற்கான ஒரு கருவியாக செயற்படுகிறது. தைரியமான மற்றும் வழக்கத்திற்கு மாறான பாணி தேர்வுகள் மூலம் ஒரே மாதிரிகள் மற்றும் சமூக விதிமுறைகளிலிருந்து விடுபடும் திறன் இதற்கு உண்டு. அழகு தரநிலைகளை சவால் செய்வதற்கும் மறுவரையறை செய்வதற்கும், உள்ளடக்கம் மற்றும் பன்முகத்தன்மையை மேம்படுத்துவதற்கும் ஃபேஷனைப் பயன்படுத்த முடியும்.



# விரைவில் இஸ்ரேல்– காசா போர் நிறுத்தம்: பிணையக் கைதிகளை விடுவிக்க தயாராகும் ஹமாஸ்!



அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள டொனால்டு டிரம்ப் எதிர் வரும் திங்கட்கிழமை அதிபராக பதவி ஏற்க உள்ள நிலையில் அதற்கு முன்னதாக வருகிற பேச்சுவார்த்தை வெற்றியடைந்து இஸ்ரேல்–காசா இடையில் போர் நிறுத்தம் ஏற்படும் எனவும், ஹமாஸ் 33 பிணையக்கைதிகளை விடுதலை செய்ய தயாராக இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 2023-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ஆம் திகதி நடத்திய தாக்குதலில் பிணையக்கைதியாக பிடிக்கப்பட்டவர்களில் இன்னும் 94 பேர் ஹமாஸிடம் உள்ளனர். இதில் சுமார் 34 பேர் உயிரிழந்திருக்கலாம் என இஸ்ரேலால் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கிடையில் அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள டொனால்டு டிரம்ப் "வருகிற 20 ஆம் திகதி அதிபராக பதவியேற்கு முன் போர் நிறுத்த ஒப்பந்தம் முடிவடையும் என நம்புகிறேன்" எனத் தெரிவித்திருந்தார்.

# ஜப்பானில் சக்திவாய்ந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து விடுக்கப்பட்ட சுனாமி எச்சரிக்கை!




ஜப்பான் நாட்டின் தென் மேற்கு பகுதியில் உள்ள கைஷூ பகுதியில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கம் ரிக்டரில் 6.9 ஆக பதிவாகி உள்ளது. இந்த நிலநடுக்கம் பூமியில் இருந்து 37 கிலோமீட்டர்கள் ஆழத்தில் ஏற்பட்டது.

இதனை ஐரோப்பிய நில-நடுக்கவியல் மையம் தெரிவ-ித்துள்ளது. சக்திவாய்ந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து ஜப்பானின் தென் மேற்கு கடலோர பகுதிகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

# லாஸ் ஏஞ்சல்ஸ் காட்டுத் தீ: உயிரிழப்பு மேலும் அதிகரிப்பு!



அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் கடந்த 7-ஆம் திகதி பயங்கர காட்டுத் தீ ஏற்பட்டது. இந்த காட்டுத் தீ அங்கிருந்த மற்ற பகுதிகளுக்கும் பரவி வருகிறது. தற்போது காட்டுத் தீயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை மேலும் 24 ஆக அதிகரித்துள்ளது.

இதனால் சுமார் 12 ஆயிரம் பேரின் வீடுகள் தீக்கிரையாகின. வீடுகளை இழந்த மக்கள் தற்காலிக நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர். இதுவரை 15 சதவீதம் தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டு இருப்பதாக தீயணைப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

காட்டுத் தீயை அணைக்கும் பணியில் நூற்றுக்கணக்கான விமானங்கள், ஹெலிகாப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டு உள்ளன. கலிபோர்னியா ஆளுநர் கேவின் நியூசம் கூறும்போது, "லாஸ் ஏஞ்சல்ஸ்-ஐ சுற்றி பரவி வரும் காட்டுத் தீக்கு இதுவரை 24 பேர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்கா வரலாற்றில் இது ஒரு மிகப்பெரிய இயற்கை பேரழிவு. இந்த பேரழிவு ஆயிரக்கணக்கான வீடுகளை அழித்துவிட்டது," என்று தெரிவித்தார்.



# மத்திய இஸ்ரேலை குறிவைத்து ஏவுகணை தாக்குதல் நடத்திய ஹவுதி!

நேற்று திடீரென ஏமன் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மத்திய இஸ்ரேலை குறிவைத்து ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளனர்.

காசா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா, ஏமனில் உள்ள ஹவுதி கிளர்ச்சிக்குழு ஆகியவை இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகிற நிலையில் இந்த தாக்குதல் இடம்பெறுள்ளது .

இதனால் எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டதால் பொதுமக்கள் பாதுகாப்பான மறைவிடத்திற்கு ஓடினர்.

இதற்கிடையே ஏவுகணையை தடுத்து அழிக்கும் பாதுகாப்பு சிஸ்டம் மூலமாக ஏவுகணை தடுத்து அழிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. இதனால் காயம் ஏதும் ஏற்படவில்லை எனவும் தெரிவித்துள்ளது.

திங்கட்கிழமை இரவும் ஹவுதி ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த ஏவுகணை இஸ்ரேல் எல்லைக்குள் நுழைவதற்குள் தாக்கி அழிக்கப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி ஏமனின் தலைநகரான சானாவை 2014-ல் இருந்து கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. இஸ்ரேல் மீது நேரடி தாக்குதல் நடத்தி வரும் அதேவேளையில், சுமார் 100 வணிக கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுதம் தூக்கிப் பின்னர், 1989 இலும் ஆயுதம் தூக்கி ஜே.வி.பி. போராட்டம் செய்தபோது, கைதாகி சிறையில் இருந்த ஜே.வி.பி. போராளிகளை, அன்றைய அரசு, “பயங்கரவாதிகள்” என்றது. ஆனால், ஜே.வி.பியினர், “இல்லை, அவர்கள் அரசியல் போராளிகள்” என்றார்கள்.

2015 - 2019 கால நமது நல்லாட்சியிலும் இடைக்கிடை ஓரிரு அமைச்சர்கள் இப்படிச் சொன்னார்கள். ஆனால், அன்றைய தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சராக இருந்து, அவர்களைக் கண்டித்து, அமைச்சரவைக்குள் அவர்களைப் புறந்தள்ளி, ஏனைய முற்போக்கு அமைச்சர்களுடனும், வெளியே தமிழ்த் தேசியக் கட்சிகளுடனும் இணைந்து, கணிசமான தமிழ் அரசியல் கைதிகளை நாம் சத்தமில்லாமல் விடுவித்தோம்.

தமிழ் அரசியல் கைதிகளை அதிகமாக விடுவித்தது எமது நல்லாட்சி அரசாங்கம்தான். இதில் மாற்று பேச்சுக்கு இடமில்லை. இதனால்தான் இன்று வரை இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் எண்ணிக்கை கணிசமாக குறைந்தது.

ஆனால், அன்று ஆயுத போராட்டம் செய்த ஜே.வி.பியே, இன்று இப்படிக் கூறுகின்றது. “அரசியல் கைதிகள் இல்லை” என்று கூறி, அவர்களுக்குப் பயங்கரவாதிகள் பட்டம் சூட்ட முனைகின்றது. 1971 இல், தமிழ் இளைஞர் ஆயுதம் தூக்க முன்னமே, ஆயுதம் தூக்கிய தமது அங்கத்தவர்களை அரசியல் போராளிகளாக அடையாளம் காணும் ஜே.வி.பி., கைதாகி சிறையில் உள்ள தமிழ் இளைஞர்களை, அரசியல் கைதிகள் இல்லை என்று கூறுகின்றது. இந்த இரட்டை வேடம், இவர்களுக்கு இன்று வாக்களித்த செந்தமிழர்களுக்குத்தான் வெளிச்சம்.” - என்றார்.

## கனேடிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு கனேடியப் பிரதி அமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்த நிலையில், குறித்த சந்திப்புகள் தொடர்பிலும், சமகால அரசியல் நிலைவரம் தொடர்பிலும் பேசப்பட்ட இந்தக் கலந்துரையாடலின் போது, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவினருக்கும், கனேடியத் தூதுவருக்கும் இடையிலான சந்திப்பொன்றை ஒழுங்கமைக்குமாறு கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன், தூதுவரிடம் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரித்தாளும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வகையில் ஊடகப்பரப்பில் இருப்பவர்கள் என்னுடன் தொடர்புகொண்டு அந்தச் செய்தி தொடர்பான கருத்துகளைக் கேட்டிருந்தனர். இந்த விடயம் தொடர்பாக இதுவரை நடைபெற்ற கூட்டங்கள் எதிலும் கலந்துரையாடப்படவில்லை என்பதையும், அத்தகைய எந்த முடிவும் இதுவரை எடுக்கப்படவில்லை என்பதுடன் எமது யாப்பில் சில மாற்றங்களை மேற்கொள்வது தொடர்பிலேயே விவாதித்திருந்தோம் என்பதையும் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேநேரம் ஆளும் தரப்பு முக்கியதர்கள் சிலர் தமிழ்க் கட்சிகள் தனித்தனியே நின்று தீர்வுக்கான கருத்துகளைக் கூறாமல், ஒன்றுபட்டு ஒரே கருத்தைக் கூறுவார்களாக இருந்தால் அது தொடர்பில் பேசலாம் என்றும் செய்திகளை வெளியிட்டு வருகின்றார்கள். இது ஒரு வகையில் தமிழ்த் தரப்பின் மீது குற்றங்களைச் சுமத்தி தீர்வை எட்டாமல் செய்வதற்கான அரசின் சாதுர்யமான பிரித்தாளும் தந்திரோபத்தையே காட்டுகின்றது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் தமிழ்த் தரப்புகள் அவதானமாகவும் ஒன்றுபட்டும் செயற்பட வேண்டியதன் அவசியத்தை தமிழ் அரசியல் பரப்பில் உள்ளோர் புரிந்துகொள்ள வேண்டும்.

குறுகிய கட்சி நலன்களைக் கைவிட்டு, தமிழ் மக்களின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பது தொடர்பான காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற சக்திகளாகவும் வலுவான சக்திகளாகவும் தங்களை தகவமைத்துக் கொள்வதற்கான காலசூழல் ஏற்பட்டிருப்பதாகக் கருதுகின்றோம். இதனைப் பற்றிப் பிடித்து அனைவரும் முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.” - என்றுள்ளது.

## கூட்டுறவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2025 ஆம் ஆண்டுக்காக கூட்டுறவு சமாசங்களின் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி படுதோல்வியடைந்துள்ளதாக ஹோமாகம பிரேதேச சபையின் முன்னாள் உறுப்பினர் கமல் சந்தன தெரிவித்தார்.

ஹோமாகமவிலுள்ள 59 கூட்டுறவு பிரதேசங்களில் 17 பிரதேசங்களை மாத்திரமே தேசிய மக்கள் சக்தி வெற்றி ஈட்டியுள்ளது. தாம் உள்ளிட்ட ஒன்றிணைந்த குழுக்கள் 59 பிர தேசங்களில் 31 பிரதேசங்களை வெற்றிக்கொண்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

கமல் சந்தனவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக சந்திப்பிலேயே இதனைக் சுட்டிக்காட்டினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

2025 இற்கான ஹோமாகம கூட்டுறவு சமாசங்களின் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அல்லது மக்கள் விடுதலை முன்னணியை படுதோல்வியடையச்செய்துள்ளோம். 59 கூட்டுறவு பிரதேசங்களில் 17 பிரதேசங்களை மாத்திரமே தேசிய மக்கள் சக்தி வெற்றிகொண்டிருந்தது. ஒன்றிணைந்த குழுவினர் என்ற அடிப்படையில் 31 பிரதேசங்களை வெற்றிக கொள்ளக் கூடியதாக இருந்தது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களின்போது தேசிய மக்கள் சக்திக்கு அல்லது மக்கள் விடுதலை முன்னணி வெற்றியடைந்தபோது கூட்டுறவு சமாசங்களையும் தமது அதிகாரத்தின் கீழ் கொண்டு வருவோம் என்று கூறியே அவர்கள் முழு நாட்டுக்கும் அறிவித்திருந்தார்கள். ஆனால், இன்று ஹோமாகம தேர்தல் தொகுதியில் கூட்டுறவு சமாசங்களின் தேர்தலில் வெற்றியடைவதற்காக தேசிய மக்கள் சக்திக்கு எதிராக கட்சி பேதமின்றி கூட்டணி அமைத்துள்ளோம். இதனூடாக நாட்டுக்கு முன்னுதாரணத்தை கொடுத்துள்ளோம்.

எனவே, எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள செயற்பாடுகளில் ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என்பதையும் கூறிக் கொள்ள விரும்புகிறோம்.

ஹோமாகம கூட்டுறவு சமாசங்களின் தேர்தலின்போது ‘கிளீன் ஸ்ரீலங்கா’ வேலைத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்குமாறு பிரசாரம் செய்தார்கள். இவ்வாறானதொரு பின்னணியிலேயே இந்தத் தேர்தலில் நாங்கள் வெற்றியடைந்துள்ளோம்.

ஹோமாகம நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அவரின் முகப்புத்தகத்தில், ஹோமாகம கூட்டுறவு சமாசங்கள் ஊழல் நிறைந்தவை என்று பிரசாரம் செய்துள்ளார். இதேபோன்றதொரு பிரசாரத்தையே ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் முன்னெடுத்திருந்தார்கள்.

இலங்கையில் இருக்கும் சிறந்த கூட்டுறவு பல்நோக்கு சமாசங்களில் ஹோமாகம கூட்டுறவு சமாசமும் ஒன்றாகும். ஹோமாகம கூட்டுறவு சமாசம் அதிக இலாபத்தையும் உழைக்கிறது. தேசிய மக்கள் சக்தி முன்வைத்த சகல குற்றச்சாட்டுக்களையும் தோற்கடித்து தேசிய மக்கள் சக்தியை தோற்கடிக்க இந்த ஒன்றிணைந்த அமைப்பு ஒத்துழைப்பை பெற்றுக்கொடுத்துள்ளது. எனவே, ஹோமாகம கூட்டுறவு சமாசங்களின் இந்த வெற்றியை முன்னுதாரணமாகக் கொண்டு நாட்டின் தலைவர்கள் அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.” - என்றார்.

## சீன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பு இன்று நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் முக்கிய பல விடயங்கள் பேசப்பட்டன. சீன நாட்டு நேரப்படி மாலை 5 மணிக்கு மக்கள் மண்டபத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

# டின் மீன்கள் வாங்குவோர் அவதானம்!

கொழும்பு, ஜன 15

இலங்கையில் விற்பனை செய்யப்படும் டின் மீன்களில் பாதியளவான டின்மீன் உற்பத்திகள் எதுவித தரச்சான்றிதழ்களும் அற்றவை என தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கை நுகர்வோர் விவகார அதிகார சபையின் தகவல்களின் பிரகாரம், இலங்கையில் 28 வர்த்தக நாமங்களின் கீழ் டின்மீன்கள் சந்தைப்படுத்தப்படுகின்றன. இவற்றில் 15 வர்த்தக நாமங்களைக் கொண்ட நிறுவனங்கள் மட்டுமே தரச்சான்றிதழ் உள்ளிட்ட அனுமதிகளைப் பெற்றுள்ளன. அவற்றின் மூலமாக சந்தைப்படுத்தப்படும் 48 வகையான டின் மீன்களுக்கு இலங்கை தரச்சான்றிதழ் நிறுவனத்தின் தரச்சான்று வழங்கப்பட்டுள்ளது. அதோடு ஏனைய 13 வர்த்தக நாமங்களைக் கொண்ட நிறுவனங்களுக்கும் எதுவித தரச்சான்றுகளும் வழங்கப்படாத நிலையிலேயே அவற்றின் டின்மீன்கள் சந்தைப்படுத்தப்படுவதாக தேசிய கணக்காய்வு நிறுவனத்தின் அறிக்கையொன்று தெரிவிக்கின்றது. (ஐ)

# சீமெந்தின் விலையை குறைக்க தீர்மானம்

கொழும்பு, ஜன 15

சீமெந்து மீதான தற்போதைய செஸ் வரியைக் குறைப்பதற்கான முன்மொழிவுக்கு அரசாங்க நிதி பற்றிய குழுவின் ஒப்புதல் கிடைத்துள்ளது.

இதன் மூலம் ஒரு மூட்டை சீமெந்தின் விலை சுமார் நூறு ரூபாய் குறையும் என்று நிதி அமைச்சக அதிகாரிகள் குழுவிற்கு அறிவித்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தலைமையிலான அரசாங்க நிதி பற்றிய குழு கடந்த 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் கூடியபோது இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

# மாவின் விலை குறைந்தால் பாண் விலை குறையும்



கொழும்பு, ஜன 15

ஒரு கிலோ கோதுமை மாவின் விலையை 25 ரூபாவினால் குறைக்கும் பட்சத்தில், பாண் ஒன்றினை 100 ரூபாவில் நுகர்வோருக்கு வழங்க முடியும் என அகில இலங்கை பேக்கரி சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

வர்த்தக, வணிக, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்கவுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் அகில இலங்கை பேக்கரி சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அந்த அமைச்சில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது. அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜெயவர்தன உள்ளிட்ட பேக்கரி உரிமையாளர்கள் குழு இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டது.

டொலரின் விலை குறைந்துள்ள போதிலும் ஒரு கிலோ கோதுமை மாவை 190 ரூபாவிற்கு கொள்வனவு செய்ய வேண்டியுள்ளதாக பேக்கரி உரிமையாளர்கள் அமைச்சரிடம் தெரிவித்தனர். ஒரு கிலோவுக்கு 45 ரூபா வரி குறைக்கப்பட்டு, கோதுமை மாவை இறக்குமதி செய்ய எவருக்கும் சந்தர்ப்பம் வழங்கினால், நிறுவனங்களின் ஏகபோக உரிமை உடைக்கப்படும் என பேக்கரி உரிமையாளர்கள் தெரிவித்தனர். இந்நிலையில் பாண் விலை அதிகரிப்பினால் பாண் பாவனை ஓரளவு குறைந்துள்ளதாகவும் பேக்கரி உரிமையாளர்கள் அமைச்சரிடம் தெரிவித்தனர். பேக்கரி உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் எனவும், அதற்காக கோதுமை மா மற்றும் வெண்ணெய் இறக்குமதியாளர்களை அழைத்து உடனடியாக கலந்துரையாடல் நடத்தப்படும் எனவும் அமைச்சர் பேக்கரி உரிமையாளர்களுக்கு அறிவித்துள்ளார். (ஐ)

# நீராட சென்ற இளைஞன் மாயம்

கொழும்பு, ஜன 15

மடு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குஞ்சுக்குளம் பிரதேசத்தில் மல்வத்து ஓயாவில் நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் கடந்த திங்கட்கிழமை மாலை நீரில் மூழ்கி காணாமல் போயுள்ள நிலையில் இளைஞரை தேடும் நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

பொலிஸார் மற்றும் அப்பிரதேச மக்கள் இணைந்து தேடிய போதும் நேற்று மாலை வரை குறித்த இளைஞன் மீட்கப்படவில்லை.

இளைஞன் காணாமல் போனமை குறித்து மடு பொலிஸாருக்கு கிடைத்த முறை பாட்டைத் தொடர்ந்து மடு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்த நிலையில் இளைஞன் நீராடச் சென்ற பகுதிக்குச் சென்ற பொலிஸார் மற்றும் அப்பிரதேச மக்கள் தேடுதல்களை மேற்கொண்டனர்.

சம்பவத்தில் 23 வயதுடைய புஸ்ஸல்லாவ பகுதியைச் சேர்ந்த ஒருவரே காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இளைஞன் கடந்த திங்கட்கிழமை (13) ஐந்து பேருடன் மடு தேவாலயத்திற்கு சென்றுவிட்டு மல்வத்து ஓயாவில் நீராடச் சென்ற போதே நீரில் மூழ்கி மாயமானதாக தெரிவிக்கப்படுகிறது (ஐ)







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.01.2025 இல் வெளியிடப்பெற்றது.